**த. நா.ச.பே. எண் : 023** **நாள் : 30.08.2016**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை - 30.8.2016

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சுற்றுச்சூழல் துறை குறித்த பின்வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. இயற்கை எழிலோடு கூடிய ஏரிகள் குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதுடன், நிலத்தடி நீர் பாதுகாக்கவும் பயன்படுகின்றன. எனவே, ஏரிகளை பாதுகாக்கவும், புனரமைக்கவும் தேவையான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

சென்னை பெருநகரம், ஆவடி நகராட்சியின் எல்லையில் 87.06 ஏக்கர் பரப்பளவில், பருத்திப்பட்டு ஏரி அமைந்துள்ளது. இந்த ஏரியில் உள்ள, ஆக்கிரமிப்புகளை அகற்றி இது மேம்படுத்தப்படும். இந்த ஏரியில் தூர் வாருதல், நீர்வரத்து வாய்க்காலை மேம்படுத்துதல், நீரியல் தரத்தை சீராக்குதல் போன்ற பணிகள் 28 கோடியே 16 லட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். பறவைகள் வந்து செல்வதற்கு ஏற்ற இயற்கை சூழலுடன் கூடிய தீவுகள் ஏற்படுத்தப்படும்.

2. சுற்றுச்சூழல் தொடர்பான விழிப்புணர்வை குழந்தைகள், பள்ளி மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரிடம் ஏற்படுத்தும் வகையில் தண்டையார்பேட்டையில் கோக்ரேன் பேசின் ரோடு, கொருக்குப்பேட்டையில் 50,110 சதுர அடி அளவுள்ள நிலத்தினை மேம்படுத்தி புல்வெளி, நடைபாதை, சிறுவர் பூங்கா, விளையாட்டுத் திடல், மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பதாகைகள் போன்ற வசதிகள் உள்ளடக்கிய **‘அம்மா சுற்றுச்சூழல் பூங்கா’** ஒன்று 2 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

3. ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டம், வடமுகம் வெள்ளோடு கிராமத்தில் உள்ள பெரிய குளம் ஏரி, வெள்ளோடு பறவைகள் சரணாலயம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த சரணாலயத்திற்கு சுமார் 146 வகையான உள்ளூர் மற்றும் வெளிநாட்டுப் பறவைகள் வருகை புரிகின்றன. கடந்த பிப்ரவரி மாதம் பறவைகள் கணக்கெடுப்பு செய்யப்பட்டதில் 37 வகையான நீர் வாழ் பறவைகள், 57 வகையான நில வாழ் பறவைகள் என மொத்தம் 24,427 பறவைகள் இருப்பது தெரிய வந்தது. வெள்ளோடு பறவைகள், சரணாலயம் அமைந்துள்ள பெரிய குளம் ஏரி புனரமைக்கப்படும். இதனால் ஏரியின் உள்பகுதியில் பறவைகளுக்கு தேவையான நீர்பிடிப்புப் பகுதி கூடுதலாகும். ஏரி தூர் வாரப்பட்டு அழகுப்படுத்தப்படுவதோடு, கரையைச் சுற்றி நடைபாதை அமைக்கப்படும். மேலும், மண்திட்டு அமைத்து மரங்கள் நடப்பட்டு பறவைகள் தங்குவதற்கு வசதிகள் செய்யப்படும். இந்தப் பணிகள் 4 கோடியே 90 லட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

4. ஈரோடு மாநகராட்சியில் அமைந்துள்ள முத்தம்பாளையம் ஏரி தூர்வாரும் பணி, நீர்வரத்து வாய்க்கால் மேம்படுத்தும் பணி போன்ற பணிகள், 2 கோடியே 75 லட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். இதன் மூலம், ஒரு சுகாதாரமான சூழல் ஏற்படுவதுடன் நீர் ஆதாரமும் பெருகும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

*****

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**